pdf

**திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின்**
**செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர் : திருமதி.மு.ராணி.,**

**ந.க.எண் : 1416/2023/ஊ.வ.1** **நாள் : 08.05.2023.**

பொருள் : பணியமைப்பு - திண்டுக்கல் மாவட்டம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம் - துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.(லேட்).அ.செந்தில்குமரன் என்பவர் 16.10.2022 அன்று பணியிடைக் காலமானது - அன்னாரின் வாரிசுதாரர்/மனைவி திருமதி.ச.சங்கிலீஸ்வரி என்பவருக்கு 2022-2023 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டில் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநிலையில் - பணிநியமனம் வழங்கி ஆணையிடுதல்.

பார்வை :

1. தொப்பம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) கடித ந.க.எண்: 2757/2022/பி1, நாள்: 17.02.2023.
2. திருமதி.ச.சங்கிலீஸ்வரி, க/பெ.லேட்.அ.செந்தில்குமரன், 556,ஹரினி இல்லம்,தட்டாங்குளம் ரோடு,பாண்டியன் நகர்,பழனி, திண்டுக்கல் மாவட்டம் என்பவரது விண்ணப்பம் நாள்: 21.10.2022.
3. அரசாணை நிலை எண்:16, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத்துறை, நாள்:21.02.2016
4. அரசாணை நிலை எண்:18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு(க்யூ 1) துறை நாள்:23.01.2020
5. திண்டுக்கல் மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் கடித ந.க.எண்:00083/அ/2019, நாள்:12.04.2023.
6. பழனி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற வழங்கப்படும் ஒருங்கிணைந்த சான்றிதழ் ப.மு.எண்:11266/2022/ஆ3, நாள்: 30.12.2022.
7. அரசாணை எண்:248, நிதித்துறை (CMPC) நாள்: 20.05.2020
8. அரசாணை எண்:382, நிதித்துறை (CMPC) நாள்: 24.10.2020
9. சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்:411/2022/எப்.1, நாள்:28.09.2022.

********

**ஆணை :**

திண்டுக்கல் மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராக (ம.கா.தே.ஊ.வே.உ.திட்டம்) பணிபுரிந்து 16.10.2022 அன்று பணியிடைக்காலமான திரு.(லேட்).அ.செந்தில்குமரன் என்பவரது சட்டப்பூர்வ வாரிசுதாரரும்/ மனைவியுமாகிய திருமதி.எஸ்.சங்கிலீஸ்வரி என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிடக் கோரி பார்வை 2 இல் கண்டுள்ளவாறு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

பணியிடைக்காலமான அரசு ஊழியர் திரு.(லேட்).அ.செந்தில்குமரன் என்பவரது பிறந்தநாள் 12.06.1974 ஆகும். இவர் பணியிடைக்காலமாகாமல் இருந்திருந்தால் 30.06.2034 பிற்பகல் பணி ஓய்வு பெற்றிருப்பார்.

பணியிடைக்காலமான அரசு ஊழியர் திரு.(லேட்).அ.செந்தில்குமரன் என்பவரின் சட்டப்பூர்வ வாரிசுதாரரும் / மனைவியுமாகிய திருமதி.எஸ்.சங்கிலீஸ்வரி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவதற்கு ஆட்சேபணை ஏதும் இல்லையென இதர வாரிசுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

பார்வை 6 இல் காணும் பழனி வட்டாட்சியரின் ஒருங்கிணைந்த சான்றில் இறந்த அரசு ஊழியரின் மனைவி மறுமணம் செய்து கொள்ளவில்லை என்றும், குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியவில்லை என்றும், இறந்த பணியாளரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும் சான்றளிக்கப்பட்டுள்ளது.

திருமதி.எஸ்.சங்கிலீஸ்வரி 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். இவரது கணவர் 16.10.2022 அன்று இறந்தபோது இவருடைய வயது 42 ஆகும். கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் 21.10.2022 அன்று இவரது வயது 42 ஆகும். இவர் தனது கணவர் இறந்த 3 ஆண்டுகளுக்குள் பணி நியமனம் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

மேலும் அரசு விதிகளின்படி 50 வயதிற்குள் விண்ணப்பித்துள்ளார். இவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற தேவையான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

எனவே, **திருமதி.எஸ்.சங்கிலீஸ்வரி** என்பவரை திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் தற்காலிகமாக கருணை அடிப்படையில் **ரூ.19500 - 62000 Level** 8 என்ற புதிய ஊதிய விகிதத்தில் **பழனி ஊராட்சி ஒன்றியத்தில்** காலியாக உள்ள **இளநிலை உதவியாளர்** பணியிடத்தில் கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணி நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. இந்த நியமன உத்தரவு முற்றிலும் தற்காலிகமானதாகும். இதனடிப்படையில் வருங்காலத்தில் எந்த உரிமையும் கோர முடியாது. மனுதாரர் தெரிவித்துள்ள

விபரங்கள் மற்றும் சமர்ப்பித்துள்ள சான்றிதழ்கள் போலியானது எனத் தெரிய வந்தால் எக்காரணமும் இன்றி இவர் பதவி நீக்கம் செய்யப்படுவார்.

2. இவரது பணி நியமனம் அரசின் ஒப்புதலுக்குட்பட்டது.

3. இவர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவம் காலமாக கருதப்படும். மேலும், அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 பொது விதி 31 இன்படி தகுதிகாண் பருவத்தில் உள்ளவர்கள் அதிகபட்சமாக ஐந்து ஆண்டு கால வரம்பிற்குள் துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மற்றும் பவானிசாகரில் நடத்தப்படும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படைப்பயிற்சியை முடிக்க வேண்டும்.

4. அரசாணை நிலை எண்.1168 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்: 20.11.1981-ன்படி தகுதிகாண் பருவ காலத்திற்குள் அனைத்துத்துறை தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெறாவிட்டால் அதிகபட்சமாக ஐந்தாண்டுகளுக்கு மேல் தகுதிகாண் பருவம் நீட்டிக்கப்படமாட்டாது.

5. பணியேற்ற 5 ஆண்டுகளுக்குள் தகுதிகாண் பருவம் நிறைவு செய்வதற்கான தகுதிகளை பெறவில்லையெனில் எந்த வித முன்னறிவிப்பும் இன்றி பணிநீக்கம் செய்யப்படுவார்.

6. இவர் புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுவார்.

மேற்காணும் நிபந்தனைகளை உறுதிமொழித்தாளில் 3 நகல்கள் தட்டச்சு செய்து தனியரின் கையொப்பம் பெற்று 2 நகல்களை மாவட்ட ஆட்சியரகத்திற்கு அனுப்பி வைத்திடவும், ஒரு நகலை அலுவலகத்தில் வைத்து பாதுகாக்குமாறும் தொடர்புடைய அலுவலகத் தலைமையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இவர் அரசு உதவி மருத்துவ அலுவலரிடம் உடற்தகுதி சான்று பெற்று இவ்வுத்தரவு கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் பணியேற்க வேண்டும். இவர் பணியேற்பு செய்தது குறித்த அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு **பழனி** ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

08/05/2023

**மாவட்ட ஆட்சியரின் நேர்முக**
**உதவியாளர்(வளர்ச்சி)**
**திண்டுக்கல்.**

08.5.23

பெறுநர் :-

திருமதி.ச.சங்கிலீஸ்வரி,
த/பெ.திரு.(லேட்)அ.செந்தில்குமரன்,
556,ஹரிணி இல்லம்,
தட்டான்குளம் ரோடு,

பாண்டியன் நகர்,
பழனி தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.

**நகல் :-** 1. ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை-15.

2. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), பழனி ஊராட்சி ஒன்றியம்.

3. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) , தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம்.

4. ஊ.வ.1 இருப்பு கோப்பிற்கு.